# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 16 /பேரூ/2024**
**நாள் : 24.01.2025**

திரு. S. சுனில்
களியக்காவிளை,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை, புனித அந்தோணியார் வணிக வளாகம் (மேல் தளம்), களியக்காவிளை தினசரி சந்தை வியாபாரிகள் நலச் சங்கம் எனற முகவரியைச் சேர்ந்த திரு. S. சுனில் என்பவரது 22.03.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.03.2024 அன்று பெறப்பட்டு, 16/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை, புனித அந்தோணியார் வணிக வளாகம் (மேல் தளம்), களியக்காவிளை தினசரி சந்தை வியாபாரிகள் நலச் சங்கம் என்ற முகவரியைச் சேர்ந்த இச்சங்கத்தின் செயலாளர் திரு. S. சுனில் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியில் 2019-20 மற்றும் 2020-21-ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தைகளை குத்தகைக்கு ஏலம் விடப்பட்டதில் அப்போதைய களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. செ. யேசுபாலன் மற்றும் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்

திரு.கண்ணன் ஆகியோர் பல்வேறு முறைகேடுகள் செய்துள்ளதாகவும், குத்தகைதாரர்கள் விதி மீறி அதிக சந்தை தொகை வசூலித்ததாகவும் மற்றும் அதற்கான இரசீதும் வழங்கப்படவில்லை எனவும் புகாராக தெரிவித்து திரு. செ. யேசுபாலன் மற்றும் திரு. கண்ணன் ஆகிய இருவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 25.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியில் 20.03.2020 அன்று நடைபெற்ற ஏலத்தில் விதிமுறைகளை மீறி செயல்பட்ட செயல் அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி திரு. எஸ். சுனில் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்WP (MD) No.7499/2022-க்கு கீழ்க்கண்ட விவரப்படி 20.04.2022ம் தேதி தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ORDER:

.... For the foregoing reasons, this Court directs the third respondent (Kanniyakumari District Collector) to consider the petitioner's representation dated 22/12/2021 seeking for legal action in respect of the alleged irregularities committed by the 6$^{th}$ (Thiru C. Yesubalan and 7$^{th}$ (Thiru Kannan) respondents while they were in office and pass final orders on merits and in accordance with the law after affording a fair hearing to the petitioner, within a period of three months, from the date of receipt of a copy of this order.

மேற்படி ஆணையினை நிறைவேற்றும் பொருட்டு 18.10.2022 நாளிட்ட விசாரணை அழைப்பின்படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 28.10.2022, 02.12.2022, 06.01.2023, ஆகிய தினங்கள் விசாரணை நடைபெற்றது. விசாரணையின் அடிப்படையில் முன்னாள் செயல் அலுவலர் மீது சுமத்தப்பட்டுள்ள முறைகேடுகளில் சில முறைகேடுகள் கண்டிக்கத்தக்கதாகவும், சில முறைகேடுகள் எழுத்தர் பிழையினால் ஏற்பட்டதாகவும், மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டிய பிரச்சனையான ஏலங்களில் முழுமையாக தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், கவனக்குறைவினாலும், ஆவணங்களை முறையாக பராமரிக்கப்படாததாலும் ஏற்பட்டவையாகும் எனவும், ஏல நடைமுறைகள் அனைத்திற்கும் செயல் அலுவலரே முழுப் பொறுப்பாகும் என்பதால் தனி அலுவலர் என்ற முறையில் முன்னாள் உதவி இயக்குநர் திரு. ச. கண்ணன் என்பவரை மேற்படி புகாரில் இருந்து விடுவித்தும், முன்னாள் செயல் அலுவலர் திரு. யேசுபாலன் என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள 17 (a)வது விதியின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள 27.01.2023 நாளிட்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க. எண். 6295/2023/ப3-ல் ஆணையிடப்பட்டு தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு சமாதானம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன், கவனமாகவும் தன்னிச்சையாகவும்

பரிசீலிக்கப்பட்டதில் தனியரின் சமாதானம் ஏற்புடையதாக இல்லையென்பதால் தனியருக்கு கண்டனம் என்னும் தண்டனை 27.04.2023 நாளிட்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6295/2023/ப3-ல் ஆணையிடப்பட்டது.

மேலும், களியக்காவிளை தினசரி காய்கறி மற்றும் மீன் சந்தைக்கு ஏல கட்டணம் நிர்ணயம் செய்ய இயற்றப்பட்ட களியக்காவிளை பேரூராட்சி தனி அலுவலர் தீர்மானங்கள் 296, 297 நாள் 24.01.2019 மற்றும் 316, 317 நாள் 25.02.2019 ஆகியவை விதிமுறைகளுக்கு முரணானது எனவும் இத்தீர்மானங்களை ரத்து செய்யவும், இத்தீர்மானங்களின் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்வதை நிறுத்தவும் இதற்கு பொறுப்பான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் களியக்காவிளை தினசரி சந்தை வியாபாரிகள் சங்க செயலாளர் திரு. சுனில் என்பவரால் WP (MD) No.1611/2021 மற்றும் 6386/2020-ன்படியும் திரு. சி. குட்டப்பன் என்பவரால் WP (MD) No.13251/2021-ன்படியும் தொடரப்பட்ட வழக்குகளுக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் 07.12.2023 நாளிட்ட ஆணையில் கீழ்க்கண்ட விவரப்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

"It is not necessary for this Court to get into this issue since it is factual. Hence, there shall be a direction to the District Collector, Kanniyakumari District, to conduct an enquiry by affording an opportunity to all the interested parties and take a decision within a period of three months from the date of receipt of a copy of this order. The second issue is answered accordingly.

All these Writ Petitions are disposed of with the above directions. No costs. Consequently, connected miscellaneous petitions are closed".

மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் 23.04.2024 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது. விசாரணையின் அடிப்படையில் திரு. செ. யேசுபாலன் என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 17(b)-வது விதியின் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்படாமல் நிலுவையிலுள்ளது.

இந்நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் வழக்குகள் எண். WP (MD) No.1611/2021, WP (MD) No.13251/2021 மற்றும் WP (MD) No/6386/2020 மீது வழங்கிய 07.12.2023 நாளிட்ட வழங்கிய பொது தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 375B திருத்தப்படி நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் மன்றம் இல்லாத காலத்தில் மன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துவதற்கான உரிமை தனி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ளதால், அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞரிடம் சட்ட கருத்து பெற்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியால் மேல்முறையீடு வழக்கு எண். WA (MD) NO/1818/2024 மற்றும் WA (MD) No.1819/2024 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு மற்றும் களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியில் 2019-20 மற்றும் 2020-21-ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தைகளை குத்தகைக்கு ஏலம் விடப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்றதாக மனுதாரர் புகாராக தெரிவிப்பது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளதை களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

**2014-**ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு **10(3) (b)** -ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1962 or any matter pending before a Court.

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சியில் தினசரி சந்தைகளை குத்தகைக்கு விடப்பட்டதில் முறைகேடு நடைபெற்றதாக புகாராக தெரிவிப்பது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், மேற்காணும் சட்டப் பிரிவு **10(3)(b)**ன்படி, இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2025** ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் **24**ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. S. சுனில், செயலாளர்,
   களியக்காவிளை தினசரி சந்தை வியாபாரிகள் நலச்சங்கம்
   புனித அந்தோணியார் வணிக வளாகம் (மேல்தளம்)
   பேருந்து நிலையம் அருகில் களியக்காவிளை,
   கன்னியாகுமரி மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (மு.கூபொ)